570

ஸ்ரீ கிறிஸ்து ஜநநத் திருநாள்

# Carols, Hymns AND Lyrics.



**S. P. G. Church**

**Shunmugapuram**

**Tuticorin.**

1924

18/086

# Carols.

## I.

## The First Nowell.

1. தூதர் கீதம் சுவிசேஷமே,
ஓதினார் முதலோர் தூதன் அக்கீதமே,
பெத்லேம் வெளிமந்தை மேய்ப்பார்க்கே,
மெத்தக் குளிர்கொள் மாரிராவிலே.

*ff* தூதர் பாடும் கீதம் பாடும்,
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே.

2. கிழக்கில் கண்டார் ஓர் நட்சத்திரம்,
பளிச்சென பிரகாசிக்க வெகுதூரம்,
ஒளி வீசி யுலகமெங்கும்,
நிலையாய்ப் பகலிலும் ராவிலும்,

*ff* தூதர் பாடும் கீதம் பாடும்
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே,

3. அந்நட்சத்திர வொளியைப் பார்த்து
வந்தார் மூன்று மகத்வர் தூரதிருந்து
ஜென்மித்த ராஜன் தேடிக்கொண்டு
சென்றார் நட்சத்ர மார்க்கத்தைக் கண்டு.

*ff* தூதர் பாடும் கீதம் பாடும்.
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே,

4. நட்சத்ர மூர்ந்து வடமேற்கு
பெத்லேகேமுக்கு நேர்மேல் பிரகாசித்து
அத்தலத்தின் மேல் அமர்ந்தது
கர்த்தன் யேசு தங்குமிடம் பார்த்து.

*ff* தூதர் பாடும் கீதம் பாடும்
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே;

5. அம்மூன்று சாஸ்திரிகள் அங்கு
சென்று பாலனை முழங்கால் ஊன்றிநின்று
சன்னிதி பணிந்து படைத்தார்
பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமும்.

*ff* தூதர் பாடும் கீதம பாடும்
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே.

6. வானம் பூமியாவும் அமைத்து
மானிடரைத் தம் ரத்தத்தால் இரட்சித்து
ஆளும் யேசுவை ஏகோபித்து
துதிதோத்திரம் ஏற்றி பாடுவோம்,

*ff* தூதர் பாடும் கீதம் பாடுவோம்.
ஜெகராஜன் ஜென்மித்தார் இன்றே.

## 2.

## The Manger Throne.

1. ஜோதியாய் வான நட்சத்திரங்கள்
தீபம்போல் மின்னுது
சியோன் நகர் ஆலய மணிகள்
சீர் இசையாய் முழங்கிப் பாடுது
தேவசுதன் பிறந்தார் இன்று
ஜெகத்தில் நமக்கென்று.

2. எங்குங் கேளாத இன்ப கீதம்
விண்ணில் தொனிக்குது கேளும்.
எம்மாளிகையும் காணாப் பிரகாசம்
முன்னணை மீது தோன்றுது பாரும்
இன்றிரவு நீங்கிற்றே எங்கள்
இக்கட்டுப் பெருமூச் செல்லாம்.

3. நரக கணத்தை யழிக்கும்
பரம ராஜன் பிறந்தார்,
துர் ஆவிகளைத் துரத்தி வெல்லும்

சுதன்மரி வயிற்றில் தோன்றினர்,
முன்னவர் தீர்க்கர் வழுத்தும்
முன்னணே மகிபன் இவர்தான்.

4. கிறிஸ்மஸ் ஜெநநத் திருநாளேக்
கொண்டாடித் தூதரின்
சேனை நம்மோடு மா கெம்பீரமாய்
சேர்ந்து பாடுறுர் ஆனந்தமுடன்
இன்றே தேவன் மனுஷனுனர்
இதன்பின் ரகசியம்.

5. இருள் அகலப் புவிமீதில்
உதித்தார் பரஞ்சோதி
தேவனுக்கே துதி யுன்னதத்தில்
ஜெகத்தின்மீது மா, சமாதானம்
மானுடர்மேல் தேவ நேசம்,
வந்ததென்று துதியுங்கள்.

## 3.

1. பூர்வ வாக்குத் தத்தத்தின்
சாந்த ஆட்டுக் குட்டியே!
தூறல் பனிக் காலத்தில்
நமக்காய் பிறந்தாரே!

வாழ்க ! பாக்ய காலேயே !
வாழ்க ! மீட்பின் தினமே !
சாலேம் எங்கும் பாடுங்கள் !
பெத்லேகேமில் பிறந்தார் !

2. விண்ணில் சிங்காதனத்தில்
சேராபீன்கள் மத்தியில்
வாழ்வோர், மாட்டுத் தொட்டியில்
வந்துதித்தார் பாருங்கள் !

வாழ்க ! பாக்ய காலேயே !—Chorus.

3. இன்றைக் கென்ன நற்செய்தி !
மேய்ப்பர்களே ! சொல்வீரே
குன்றின்மீதில் தனியே
மந்தை விட்டு வந்தீரே—
வாழ்க! பாக்ய காலையே !—Chorus.

4 ராவில்மந்தை காக்கையில்
விந்தை சோதி கண்டோமே
விண்ணவர் பாடுகையில்
"மீட்பர் வந்தார்" என்றாரே !
வாழ்க ! பாக்ய காலையே !—Chorus.

5. திவ்ய பாலா ! இயேசுவே !
விண்ணில் வாழ்வை வெறுத்தீர் !
மண்ணுலகில் பிறந்த உம்
அன்பு மா மாட்சிமையாம்.
வாழ்க ! பாக்ய காலையே !—Chorus.

6. சாந்தமும் தாழ்மையுமாய்
நின் முகம் விளங்குதே,
தேவமைந்தா ! நாங்களும்,
தாழ்ந்திருக்கக் கற்பியும்.
வாழ்க ! பாக்ய காலையே !—Chorus.

## 4.

## When Christ was born.

1. பெத்தலைப்பதியில் கிறிஸ்து
பிறந்த தினம் தூதர்கள்
பேரானந்தமாய் பாடினார்
உன்னதத்தில் மகிமை,

2 சுதன் பிறந்தார் என்று தூதர்
ஜோதிவீச மேய்ப்பருக்கு .

சோபனம் சொல்லி பாடினார்.
உன்னதத்தில் மகிமை.

3. வேதவுரைச் சொற்படியே
மேதினியை மீட்கும் வல்ல
ராஜன் பிறந்தார் பாடுவோம்.
உன்னதத்தில் மகிமை.

4. பரதீசில் உம் சமுகம்
பார்த்தென்னும் நான் புகழ்பாட
பாலனே எனக்கிரங்கும்.
உன்னதத்தில் மகிமை.

## 5.

## Jesus in the Manger.

1 உன்னத தேவன் மா தாழ்வாய்
முன்னணை கிடப்பதேன்
பொன்னுலகுக் கினி மூலன்
புல்லணை குளிர்வதேன் ?

Chorus (இதோ) பரமநேச மகத்வம்
பரதீஸ் இழந்து நின்ற
பாவிகள் மீள
பாலன் ஏசு உதித்தார்.

2. கன்னியெனுந் தாய் மடியில்
கண்வளரும் காட்சியேன்
விண்ணவர் மகிழும் நாதன்
விம்மியழுங் கோலமேன் ?
(இதோ) பரமநேச மகத்வம்.

3. சிருஷ்டிகன் சிசுவாகி
தேவனே ரூபமாகி
சிறைமீட்போன் சிறையாகி
ஜென்மித்தார் ஆதியில்லான்.
(இதோ) பரமநேச மகத்வம்.

# Christmas.

## HYMN.

### 1.

"நாம் பெத்லகேம் ஊருக்குப் போவோம்." S. Luke, 2. 15.

1. *f* வாரும் பக்தர் யாரும்—மகிழ்ந்து கெம்பீரம்
பாடி பெத்திலேப்பதி நாடியே
பாரும் பிறந்தார் பரம இராஜன்
*p* வாழ்த்திப் பணிவோமாக,
வாழ்த்திப் பணிவோமாக,
*f* வாழ்த்திப் பணிவோமாக—கிறிஸ்துவை.

2. *f* தேவனில் தேவனே—செஞ்சோதியில் ஜோதி
*p* சீர்கன்னிகர்ப்பம் அருவருக்கார்
*f* ஜென்மிப்பானூர், சிருஷ்டியல்ல, மெய்த்தேவன்.
வாழ்த்திப் பணிவோமாக.

3. ஆயர்கள் மந்தையை,—வெளியிலே விட்டு,
*p* பயந்து தாழ்ந்து முன்னணை சேர்ந்தார்:
*p* நாமும் சந்தோஷமாய் அவ்விடம் போவோம்.
வாழ்த்திப் பணிவோமாக.

4. ஞானிகள் நட்சத்ரத்தால்,—கிறிஸ்துவை! வணங்க
பொன் போளம் தூபவர்க்கம் படைத்தார்,
*p* நாமும் இதய காணிக்கை கொடுப்போம்,
வாழ்த்திப் பணிவோமாக.

5. *p* ஏழைப் பாவிகட்காய்,—முன்னணையில் பிறந்தீர்!
அன்பு அச்சத்தோடும்மை அணைப்போம்.
*f* எம்மை நேசித்த, உம்மை யார் நேசியார்?
வாழ்த்திப் பணிவோமாக.

6. *f* பணிந்து போற்றுங்கள்—பரம சேனையே!
பண்பாய் விண்ணகர் வாழுங் கூட்டமே:

"பரனுக்கே துதி உன்னதமீதில்,"
வாழ்த்திப் பணிவோமாக.

7. *f* இன்றெங்களுக்காக—ஏசு நீர் பிறந்தீர்
என்றும் உமக்கே துதி தோத்திரம்
ஏழை மனிதனுனீர் ஆதிவார்த்தை.
வாழ்த்திப் பணிவோமாக. ஆமென்

## 2.

1. தேவன் மானிடனுனார்,
ஜீவநாதர் ஜென்மித்தார்.
பாடும் ஜெயகெம்பீரம்,
நாடும் பாலன் பொற்பாதம்.
தூத சேனை முழங்க,
பூத கணம் நடுங்க,
சுத்த கன்னி கர்ப்பத்தில்,
பெத்லேம் மாட்டுக் கொட்டிலில்
தேவன் மானிடனுனார்,
ஜீவநாதர் ஜென்மித்தார்.

2. தேவனுக்கு மகிமை,
பாவிகள்மேல் மா தயை,
மண்ணிலே சமாதானம்,
உண்டாம் இனி என்றைக்கும்,
மாந்தர் கர்வம் நீங்கிட,
சாந்தம், தாழ்மை ஓங்கிட,
கந்தைத்துணி பொதிந்து,
விந்தைக் கோலம் அணிந்து,
தேவன் மானிடனுனார்,
ஜீவநாதர் ஜென்மித்தார்.

3. ஆதியாம் அனுதியே,
ஜோதிதன்னில் ஜோதியே,
தேவ அன்பின் ரூபமே,

ஜீவ ஊற்று, மன்னுவே!
மண்ணோரை ஈடேற்றிட,
விண்ணின் தூதர் ஆக்கிட,
விண்ணின் மேன்மை துறந்தீர்,
மண்ணில் தாழ்ந்து பிறந்தீர்.
தேவன் மானிடனுனார்,
ஜீவநாதர் ஜென்மித்தார்.

4. தேவதாயார் பாக்கியம்,
ஆவியின் அனுக்கிரகம்,
கெஞ்சும் எங்கட்கருளும்,
நெஞ்சில் உற்பவத்திடும்,
கன்னி மரி பாலனை,
மன்னன் மானுவேலனை,
ஆடிப்பாடிப் போற்றுவோம்,
தேடிப்பாதம் பணிவோம்.
தேவன் மானிடனுனார்,
ஜீவநாதர் ஜென்மித்தார்.

## 3.

## ANTHEM

(1) "Unto us a child is born"

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்." (ஏசா. 9: 6, 7,)

*Soprano f* நமக்கோர் பாலன் பிறந்தார்,
*p* ஓர் குமாரன் கொடுக்கப்பட்டார்;
*Tenor* நமக்கோர் பாலன் பிறந்தார்.
*ff* ஓர் குமாரன் கொடுக்கப்பட்டார்.
*Bass* கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்.
S. S.T.F. *f* அல்லேலூயா! அல்லேலூயா! *ff* அல்லேலூயா:
*Soprano p* நமக்கோர் பாலன் பிறந்தார்.
*full ff* ஓர் குமாரன் கொடுக்கப்பட்டார்

Soprano *f*
*full*
*ff*

அவர் பேர்-அதிசயமானவர் !
அதிசயமானவர் ! ஆலோசனைக்காரர்!
வல்லமையுள்ள ஆண்டவர்
நித்தியமான பிதா,
நித்தியமான பிதா,
நித்தியமான பிதா,
சமாதானம். *fine.*

Repeat.

S.T.F. *p* அல்லேலூயா ! *f* அல்லேலூயா ! *ff* அல்லேலூயா!

Bass அவர் அளும் கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும்
சமாதானத்துக்கும் முடிவு இல்லை.

Soprano *p* தாவீதின் இராஜாசனத்தையும் அவனுடைய
இராஜ்யத்தையும், நிலைசெய்வார்.

Bass நிலைசெய்வார்.

Soprano *ff* அதை நியாயத்தினாலும் நீதியினாலும்
என்றைக்கும் நிலை நிறுத்துவார்.

Bass ஊக்கம்.

Soprano *p* சேனையின் கர்த்தரின் ஊக்கம் அதைச் செய்யும்.

S.T.F. *p* அல்லேலூயா! *f* அல்லேலூயா! *ff* அல்லேலூயா!

D. C.

---

## 4.

### கீர்த்தனை.

பல்லவி

வானதி பரனொரு நரனுருவானார் பாடிப்போற்றுவோம்.
வானதி பரனொரு நரனுருவானார் பாடிப்போற்றுவோம்.

அநுபல்லவி

ஆனர்மக வானர்மகிழ்
வானோர் துதி பாடிடவே
தானய் தயாபரனர்கிரு
சேயாய்ப்புவி அவதரித்தேகிதிரி

181086

தத்துவமுற்றிடும் அத்தனும் பெத்திலே
சத்திரமத்தியில் சித்திரமுன்னனை
கந்தையணிந்துனின் நிந்தைதொலைந்தினி
சிந்தை மகிழ்ந்து நீ சந்ததம் வாழ்ந்திட
தந்தோம் உயிர் மாபலியாகிட
வந்தோம்புவி வாழ்ந்திட என்றிட
தத்திமி தத்திமி தத்திமி யித்தினம்
பெத்தலையுற்றநம் கர்த்தனுக்கே துதி
தகிர்த ஜனுத்தரி தகிர்த ஜனுத்தரி
சுகிர்த சுசுரதுதி சுரரோடு நரரினி
தாம் தாம் தரிகிடதிம் எனத்
தொந்தோம் என்றுடிப் பண்பாடிட— வானுதி

சரணங்கள்

1. தேவாதி தேவன் முனம்
இனிவருவோமென் றோதி ஆதரம்
ஏவாளின் பவம் அறக்
கனிமரிதாய் ஒன்று னசேயாய்
பாவமுள்ள உலகதின்!
ஆவால்புவி மானிடனுகியே
பேயின் தலைசிதை வுறமிதித்தவன்
புத்தி திகைத்திட சத்துவமற்றிருள்
நித்திய அக்கினி பற்றி ஒழித்திட
சுத்தர் துதித்திடவும் முத்தியளித்திடவும்
சித்தமிகுத்தனையே நத்தியமைத்திடவும்
வந்தார் இனி வானவரோடு நாம்
தொந்தோமென் றுடிக்கொண்டாடிட வானுதி

2. எண்ணிறந்த தூதர்சேனை
பண்கள் பாடித் தோத்திரிக்க
விண்ணிறந்த வானஜோதி
தோன்றி மேய்ப்பர் காட்சிகண்டிட

மன்னன் தவீ தூரில் சிறு
கன்னிமரி பாலனாக
முன்னணை கந்தையின்மேலே
வந்தாரே கிறிஸ்தெனும் ரட்சகர்
நற்செய்தியிச்சணம் கர்த்தனைக் காணுமென்
றற்புதமோ திடத் தற்பரன் சேனைகள்
இந்நிலமக்களொரு மிக்கநற் பிரியமும்
உன்னதமதின்தேவ தேவனுக்கு மகிமையும்
பூலோகத்தில் சமாதானமு
மாகவென் றேதுதிபாடிட— வானதி

3. கர்த்தாவின் செயல்மிக்க
ஆச்சரியம் அன்புபாரும்
சற்றுகிலும் அறியா
துற்றுநோக்கும் தூதர் பாரும்
முத்தோழிற்கும் கர்த்தனாக
மூவேந்தர் துதித் தேற்றிடவே
பெற்றோர்களி கூர்ந்திட நாமும்
பெத்தலே யேகியே சத்திரம் புல்லணை
சத்தியநாதனை நித்தியதேவனை
எத்திசை போற்றுமே சத்தனை கர்த்தனை
உத்தமசீலனாக உத்திரவாதஞ்செய
ரத்தமும் சிந்திஉனைத் தத்தமதாக்கிமணா
ஜீவமுடி சூடிடவந்த
தேவாட்டுக்குட்டியைப் பாடிடுவோம்— வானதி

3. எல்லா உலகும் செய்த
பரமபிதாவைப் பாடிப் போற்றுவோம்
பொல்லாரை மீட்க வந்த
புண்ணியசுதனைப் பாடி வாழ்த்துவோம்
பாவ இருள் நீக்கும்பரி
சுத்த ஆவியைப் போற்றிடுவோம்
தேவதிரித்துவமாகிய

தேவாதி தேவனைப் பாடுவோம்
மைந்தனாய் விந்தையாய் வந்துயிர் தந்துநம்
தொந்தமா நிந்தைகள் நைந்திட நாமினி
திரிமுத லொருவனைத் தினமடி யவர்க்கருள்
திருமனுவேலனைத் தீனதயாளனை
திங்குரல் வான்புவியாமொடு
தேவாதி பாலனைப் பாடுவோம்— வானாதி

## 5

பல்லவி.

கண்டேனென் கண்குளிர—கர்த்தனையின்று.

அநுபல்லவி.

கொண்டாடும்-விண்ணோர்கள்—கோமானைக் கையிலேந்தி—கண்

சரணங்கள்.

1. அண்டரண்ட—புவனங்கள் கொண்டாடமா
சண்டாளன் சிறைமீட்கும் சத்தியனை நித்தியனை— கண்

2. பெத்தலேம் சத்திர முன்னணையில்
உற்றோருக்குயிர்-தரும் உண்மையாம் என் ரட்சகனை—கண்

3. தேவாதி-தேவனை தூதர்சேனை
ஓயாது தோத்தரிக்கும் ஒப்புநிகர் அற்றவனை— கண்

4. பார்வேந்தர் தேடிவரும்-பக்தபரனை
ஆவேந்தர்-அடிதொழும் அன்பனை என் இன்பனை நான்-கண்

5. இல்லாரெனன்-குறைதீர-என்றும்மகிழ
எல்லாநல்-லாதரவோர்சொல்விற்செய்யும்என் துரையை-கண்

6. முத்தொழிற்-கர்த்தாவாம்—முன்னவனை
இத்தரை-மீட்க எனை நத்திவந்த மன்னவனை— கண்

7. மண்ணோர்-இருள்போக்கும்-மாமணியை
விண்ணோரும-வேண்டி நிற்கும்விண்மணியைகண்மணியை-கண்

8. பொன்னுலகோர்போற்றும்-புகழ்திருவை
என்னுருவில்பின்னுருவாம்இன்னுருவைமன்னுருவை-கண்

9. தேனோதி-கட்டாத-தெள்ளமுதை
கோனை-குருவைகுலந்தழைக்கும் ஆசமுதை— கண்

10. அண்டினோர்க் கன்புருவாம்-ஆரணனை
கண்டோர்கள்-கலிதீர்க்கும்-காரணனை பூரணனை— கண்

11. அன்னையாம்-கன்னியும் ஐயனுடன்
முன்னறியாப்பசுவின் புல்லணையில் உன்னமுகை— கண்

---

## 6

### பல்லவி.

மன்னுருவானார், ஆதி மன்னுருவானார்—எதுந்
தன்னிகரில்லாத ஆதி மன்னுருவானார்.

### சரணங்கள்.

1. மன்னன் தாவீது வம்சக் கன்னியாம்மாது,—அந்தக்
கன்னியென்னும் அன்னைமரி தன்னிடமாக,
தன்னிடமாக, ஆதி தன்னிடமாக, எதுந்

2. வல்லமைத் தேவன், தீர்க்கர் சொல்லமைச் சீவன்—சிறு
வெல்லமலைக் கல்லுறுத்த புல்லணையிலே,
புல்லணையிலே, ஆதி புல்லணையிலே, எதுந்

3. எப்பொருள் மேலாநின்ற விற்பனை நூலான்—ஆதி
பொற்பரர், சுரர்பணிய, அற்புதமாக,
அற்புதமாக, ஆதி அற்புதமாக, எதுந்

4. ஆயர்கள்கூட, உயர் ஞானிகள் தேட—யூத்
ராயனென்றதாலே எரோதேயுமேவாட,
எரோதேயுமேவாட, எரோதேயுமே— எதுந்

## 7.

பல்லவி.

வந்தார் தேவமைந்தன் சிந்தைகளி கூருவோம்—புவி

சரணங்கள்

1. வந்தார் புல்லணை வானவர் சேனைகள் மங்களம் பாடிடவே
மாபுவி—சந்ததமாய்ச் சமாதானம் தழைத்திட சாலேமின்
அதிபதியே— புவி

2. சித்துருவா யொரு கர்த்தனுமாம் சிறு பெத்தலே முன்ன
ணையில்—மாபரன்
சத்தியநாதனைப் நித்திய ஜீவனை உத்தமர் பெற்றிடவே—
புவி

3, சுத்தர்களேகளி கூருங்கள் கர்த்தனைக் கீர்த்தனம் பண்ணி
டவே—மாபுகழ்
பத்திசையாழுடன் பாடிடமாமரி புத்திரனாய்ப்பிறந்து—புவி

4. ஆவலாகக் காத்திருந்தோம்மிக அலகின் துயர்கெடவே—
மாபரன்.
ஜீவன் தந்தே நம்மை மீட்டிட தேவன்மரி யுருவாய்—புவி

5. கர்த்தனுமாய் திரிதத்துவனாய்ப்பரி சுத்தர்கள் போற்றி
டவே—மாபுவி
நித்தம் துயரிடுசத்துருவை நரகத்தினில் வீழ்த்திடவே—
புவி

6. தூயமுவேந்தர்கள் பாதம் பணிந்திட ஆயரும் போற்றிட
வே—மாபுகழ்
சேயனாய் உயிர் தரும் ஆயனாய்த்திருவைங் காயனுமாகிட
வே— புவி

7. பாவிகள் நேசனாய்ப் பணிந்தவர் ஈசனாய்ப் பரலோக ராஜ
னுமாய்— மாதுயர்
மேவியே பாவிகள் முற்றும்பரனுட னேயுற வாகிடவே—
புவி

8. சுத்தர் சுத்தரென நாமம் பிதாச்சுதன் ஆவியைப் போற்றிடுவோம்—மாபரி
சுத்தமனதுடன் சத்தியநாதனை துத்தியம் செய்திடுவோம்
—புவி

---

## 8

## DOXOLOGY

### தேவஸ்துதி,

1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் வல்ல பிதாவே
உம்மைப் பணிகிறோம், சுவாமி ராஜாதி ராஜாவே
உமது மா—மகிமைக்காக கர்த்தா
ஸ்தோத்திரஞ் சொல்லுகிறோமே.

2. கிறிஸ்தே இரங்கும். குமாரனே கடன் செலுத்தி
லோகத்தின் பாவத்தை நீக்குகிற தேவாட்டுக்குட்டி
எங்கள் மனு—கேளும் பிதாவினது
ஆசனத்தோழா இரங்கும.

3. நித்ய பிதாவின் மகிமையில் இயேசுவே நீரே
பரிசுத்தாவி யோடேகமாய் ஆளுகிறீரே
ஏகமாய் நீர்—அர்ச்சிக்கப்படுகிறீர்
உன்னத கர்த்தரே. ஆமென்

---

## 9.

## Anthem for Christmas.

"அவரைப் பணிந்துக்கொள்ள வந்தோம்"

*Tenor Solo* 1.

*Mf* தூதர்வான லோகம்விட்டு
மேசியா பிறந்ததை

*f* பூமியெங்கும் அந்தச் செய்தி
கூறி அறிவிக்கிறார்
கூறி அறிவிக்கிறார்
*p* பணியுங்கள், பணியுங்கள்
இயேசு மகாராஜனை.

*Full* தூதர் வானலோகம் விட்டு
மேசியா பிறந்ததை
பூமியெங்கும் அந்தச் செய்தி
கூறி அறிவிக்கிறார்

*Treble Dim* பூமியெங்கும் அந்தச் செய்தி
*Tenor & Bass* கூறி அறிவிக்கிறார்
மேசியா, மேசியா

*Full* மேசியா பிறந்ததை
*pp* பணியுங்கள், பணியுங்கள்
இயேசு மகா ராஜனை.

*Soprano Solo* 2

*mf* மேய்ப்பர் மந்தைக் காக்கும்போது
மாட்டு முன்னணையிலே
*p* கன்னி மைந்தனாக
உற்பவித்திருக்கிறார்
*cr* தேவன் கன்னி மைந்தனாக
உற்பவித்திருக்கிறார்

*Full* *f* பணியுங்கள், பணியுங்கள்
இயேசு மகா ராஜனை.

3

*ff* சுவாசமுள்ள யாவும் சேர்ந்து
பிதா, குமாரன், ஆவியை
ஆனந்த சந்தோஷத்தோடே
என்றென்றும் துதியுங்கள்.

4

*f* என்றென்றும், என்றென்றும்
ஆநந்த சந்தோஷத்தோடே
என்றென்றும் துதியுங்கள்
என்றென்றும் துதியுங்கள்

*ff* இயேசு மகாராஜனே
இயேசு மகா ராஜனே. ஆமென்.

---

10

"எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்."

CHORUS. *f* கெம்பீரித்து முழங்கிடுங்கள்,
ஏகமாக, ஏகமாக முழங்கிடுங்கள்

*mf* தூதர்போற்றிடும் தேவ நாமத்தை வீணையினு
[லும் தம்புரினுலும்

*f* கெம்பீரித்து முழங்கிடுங்கள், ஏகமாக, ஏகமாக
முழங்கிடுங்கள்—முழங்கிடுங்கள், முழங்கிடுங்கள்,
முழங்கிடுங்கள், முழங்கிடுங்கள்.

SOPRANO. கர்த்தர் தேவனென்று அறியுங்கள். அவரே நம்மையுண்டாக்கினுர். கர்த்தர் தேவனென்று அறியுங்கள் அவரே நம்மையுண்டாக்கினுர். அவரே நம்மையுண்டாக்கினுர்.

SOP + ALTO *p* கர்த்தர் தேவனென்று அறியுங்கள் அவரே நம்மையுண்டாக்கினுர். கர்த்தர் தேவனென்று அறியுங்கள் அவரேநம்மையுண்டாக்கினுர். *f* அவரேநம்மையுண்டாக்கினுர்.

REPEAT CHORUS.

BASS. *f* அவர் வாசல்களில் பணிவோடும்
பயபக்தியோடும் பணிந்து,

*ff* அவர் வாசல்களில், அவர் வாசல்களில்
அவர் வாசல்களில் துதியோடும்.

SOP+TENOR. *mf* துதியோடும், அவர் வாசல்களில்

FULL. அவர் வாசல்களில் துதியோடும்

BASS. துதியோடும். FULL. துதியோடும்.

BASS. துதியோடும். FULL. துதியோடும்— அவர்

அவர் பிரகாரங்களில், புகழ்ச்சியோடும் பிரவேசித்து

SOP+ALTO. பிரவேசித்து FULL. புகழ்ச்சியோடும்

SOP+ALTO. பிரவேசித்து FULL. புகழ்ச்சியோடும்

FULR. *ff* அவர், அவர், பிரகாரங்களில்

புகழ்ச்சியோடும் பிரவேசித்து.

*ff* அவர் நாமத்தை ஸ்தோத்திரியுங்க....ள்.

---

தேவ ஸ்துதி·

**11**

HYMN NO. 92.

**12**

HYMN NO. 102.

**13**

HYMN NO. 118.

7A
1-68

# 14

[இராகம்—சங்கராபரணம்.] [தாளம்—ரூபகம்]

## தேவாரப் பண்.

### I

வானம் பூமி கடல் மற்றும்
யாவும் படைத்த பரன் தன்னில்
தானாய் கன்னி யிடம் வந்த
சுவாமி பதம் பணிவோம்

### II

வார்த்தை மாமிஷமாய் தெய்வ
வல்லமை அம்ல மாதாய் அருள்
வார்த்தே பூவில் வந்த ஏசு
ஆண்டவனைப் பணிவோம்

### III

சீனாய் மா மலையில் மோசே
செப்பிய வாரது போல் நல்ல
கோனா ராக வந்த ஏசு
கொற்ற வனைப்பணிவோம்

### IV.

வானில் ஜோதி மின்ன தூதர்
வந்திக்க ஆயர் போற்ற வேத
ஞானி மூவர் தொழ வந்த
சுவாமி தனைப்பணிவோம்

## 15

[இராகம்—கல்யாணி] [தாளம்—ஆதி]

பல்லவி.

வாரி வானம் பூமி வகுத்த எம் சுவாமி
வறுமைக் கோலமாய் வந்தார் பெத்லேகேமில்—வாரி

அநுபல்லவி.

பாரினிலுள்ளோர்கள் பாவ மகன்றோட
பக்தர் முக்தரோடு சித்தர்கள் கொண்டாட

சரணங்கள்.

1. ஏரில் மிகுந்த ஏகனுமோர் மந்தை
தனில் திருச் சிந்தை மகிழ்ந்துமே இந்த
காரிருளிந்நேரம் கண்டு நல்லுதாரம்
கொண்டு நன்னேரம் கொண்டார் மனுடவதாரம்— வாரி

2. ஏசுவென்னு மீசன் இகபர வாசன்
எங்கும் பிரகாசன் எளியோர் மேல் பாசன்
தேசுறு நல் ராஜன் திவ்ய சரு வேசன்
திகழ் கிரு பாசன் தீமை யகற்று முல்லாசன்— வாரி

3. பார்த்திபன் தாவீது கோத்திர நல் மாது
மரி யிட மிப்போது மனு வானார் சாது
கீர்த்தியாக இன்று கூடி நாமொன்று
சேர்ந்து ஜெபம் விண்டு செய்வோம் சரணமென்றும்—வாரி

## 16

[இராகம்—பைரவி] [தாளம்—ஆதி]

பல்லவி.

ஜெகத்ரட்சகா ஜீவவா யோகா

அநுபல்லவி.

மகத்வக் கெம்பீரா மட்டிஸ்லா வுதாரா
மனுட வதாரா மாவெல்லை யூரா.

சரணங்கள்.

1. இகந்தனி லேழை மார்தர்க்கா யிவ்வேளை
எழுந்த உம்தாளை இறைஞ்சுவ தென்வேலை.
இகபர லோகா இறைவா என்னெகா
என் அத்தனே நின் சித்தத்தாலோர்
புற் கொட்டிற்றனில் வந்த ஜெகத்
2. நன்மை சொரூபா நானிலஞான தீபா
நம்பினே னுனைவாவா—நாளுமெனைக் காவாய்
நின்னருள் தாவா நிமலா ஏகோவா
நிகரில்லாத வேத போத மோத பூதலத்தில் வந்த-ஜெகத்
3. கன்னி மரியாளா காத்தருள் நீசிலா
கருணைக் குணாளா கிருபையின் தயாளா
கண்ய மறைநூலா கவிஞர்க் கநுகூலா
என் கர்த்தனே நின் சித்தம் வைத்து
இத்தருணம் எம்மை ஆள்வாய் ஜெகத்

## 17

இராகம்-சங்கராபரணம்] தேவாரம். [தாளம்-ரூபகம்

1. எந்தைக் கிறிஸ்தேசு ராஜன்
எவ்வுயிர்க்கு மேகல் ஈசன்
இந்த உலகோர்க்கு சர்வேசன்
எழில்மிகு ஜோதிப்பிரகாசன்.
2. ஆதியி லோதிய சொல்லை
ஆதித்தாய் மீறியத் தொல்லை
மேதினியில் நீங்க இவ்வெல்லை
மலைதனில் கன்னியின் பிள்ளை.
3. ஆனோர் அகில நன்நாதன்
ஆகமம் ஓதிய நீதன்
வானோர் மகிழ்வேத போதன்
வந்தார் இனிய பொற்பாதன்.

## வருஷப் பிறப்பு.

### 18

1. வருஷப்பிறப்புண்டென்று
புதுப்பக்தியுடனே
தேவரீரை நான் பின்சென்று
வர நீர்தான், இயேசுவே,
எனக்கும் என் வேலைக்கும்
வழிகாட்டியாயிரும்,
எனக்கிப்போதும் இனியும்
ஆசீர்வாதத்தை அளியும்.

2. இது கிருபை பொழியும்
வருஷமாகட்டுமேன் ;
என்னை நீர் பிரகாசிப்பியும் ;
என் அழுக்கை அடியேன்
மனஸ்தாபத்துடனே
பார்த்தருவருக்கவே,
நற்குணத்தையும் அளியும்,
பாவம் யாவையும் மன்னியும்,

3. நீர் என் அழுக்கைக் கண்டு
துக்கத்தால் கலங்கின
அடியேனைத் தேற்றிவந்து
நித்தம் நித்தம் உம்முடைய
கையால் என்னைத் தாங்கவும்,
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவிக்கவும், அன்பாக
தயவருளுவீராக.

4. மாயமற்ற கிறிஸ்தோனாக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
ஈவளியும், கர்த்தரே.
யாவர் மேலும் பட்சத்தை

வைத்து தேவ பத்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்தே யிருப்பேனுக.

5. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உமது கரத்தை
என்மேல் வைக்கக்கடவீர்.
சகல இக்கட்டிலும்
என்னை ஆதரித்திடும்
உம்மைப்பற்றிச் சுகமாக
சாவிலும் கெலிப்பேனுக. ஆமென்.

## 19

பல்லவி.

நித்தம் அருள்செய் தயாளனே—எங்கள்
நேசா யேசு மணாளனே—ஸ்வாமி நித்தம்.

அநுபல்லவி.

உத்தம சற்குண தேவ குமாரா—உம்பர்கள்
சந்ததம் போற்றும் சிங்காரா,
சத்திய வேத வினோதலங்காரா—சதிசெய்யும்
பேய் தலை சிதைத்த சிங்காரா.— நித்தம்

சரணங்கள்.

1. பட்சப் பரம குமாரனே, எங்கள் பாவந்திரும் மாவீர னே—ஸ்வாமி,
அட்சய சவுந்தர ஆத்தும நாதா அடியவர் துதிசெய் யும் ஆரணபோதா,
இரட்சண்ய சுப சுவிசேடப் பிரஸ்தாபா, ராஜகெம் பீர சங்கீத பொற்பாதா, நித்தம்

2. சென்றுண்டமை முகம்பார்த்தவா, ஒருசேதம் விக் கினமறக் காத்தவா—ஸ்வாமி,
இன்றோர் புதுவருஷாரம்பங் கண்டோம், ஏக சந் தோஷமாய்ச் சந்தித்துக்கொண்டோம்,

குன்று உமதட ஆவியை ஈந்து கூடவே இருந்தடியார் ஜெபங்கேட்டு—— நித்தம்

3. சத்திய வேதம தோங்கி வாழ்கவே, சாற்றும் ஏசுவின் நாமம் வாழ்கவே, எங்கள்
வாத்திமார் தேசிகர் குருக்களும் வாழ்கவே, வளர் சபையோடு மாணுக்கரும் வாழ்க
ஆத்தியம் இங்கிலீஷ் துரைத்தனம் வாழ்க, சோபனம் அத்தியக்ஷர் அனுதினமும் வாழ்க —நித்தம்.

## 20

பல்லவி.

நாதனேசையனே வாழ்த்துவோம்
நவ வருடமும் தோன்றிற்றே.

அநுபல்லவி.

சென்ற நாட்களெல்லாம் செம்மையும் நன்மையும்
என்று நம் ஜீவியம் தன்னில் தொடர்ந்ததே. ——நாதனே

சரணங்கள்.

1. இத்தனை நாட்களாய் காத்தனர்
ஈந்தனர் வேண்டிய சகலமும்
இன்னொரு ஆண்டையும் இன்பமாய்க் காக்கவே
இரக்கம் வைத்தநம் இரட்சண்ய பெருமான்- நாதனே

2. தோத்திரம் தோத்திரம் தோத்திரம்
திவ்ய சிம்மாசன ராஜனே
கதியும் கனமும் தேசங்கள் யாவிலும்
தோன்றும் உமக்கே தேவாதி தேவனே—நாதனே

3. புதிய ஆண்டினில் புதியநல்
ஜீவியம் செய்திட ஏசுவே
கிருபை நதியை கடாட்சம் செய்திட
அருள் ஆவி ஊற்றி ஆசிர்வதித்திட— நாதனே

4. அருள் பொழியவும் அஞ்ஞான
இருள் ஒழியவும் மெய்ஞ்ஞானம்
சுடர்ச்சிகம்முடன் ஜோதிப் பிரகாசமாய்
தாசர்மேல் நேசமாய் வீசவும் வேண்டுவோம்—நாதனே

ARUNODHAYAM PRINTING PRESS, TUTICORIN.

181086

A. P. Press, Tuticorin,